**செய்தி வெளியீடு எண்: 188** **நாள்: 13.03.2018**

## செய்தி வெளியீடு

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் பாராட்டு

தலைக்கவசம் அணியாமலும், மது அருந்திவிட்டு வாகனங்கள் ஓட்டுவதாலும் ஏற்படும் விபத்துக்களை குறைத்து பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்திடும் வகையில் **பாதுகாப்பு தலைக்கவசம்** மற்றும் **தூங்கா கண்ணாடி** ஆகிய கருவிகளை வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் NCVTயின் கீழ் அரியலூர் மாவட்டம் செந்துறையில் இயங்கி வரும் அறிஞர் அண்ணா தனியார் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் V.கணேசன், B.சுபாஷ், G.செல்வமுருகன், K.கார்த்திக்ராஜா, R.தமிழ், D.விஜயகாந்த், M.அரவிந்தன், N.தெய்வசிகாமணி, M.சுந்தரபாண்டி, P.கமலக்கண்ணன், S.ரஞ்சித் S.செல்வமணி ஆகியோர் பயிற்றுநர்களின் உதவியுடன் கண்டுபிடித்துள்ளனர். இவர்களையும் இதற்கு உறுதுணை புரிந்த பயிற்றுநர்களையும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் ஆணையர் **திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,** அவர்கள் பாராட்டினார்கள்.

இக்கருவியில் இருசக்கர வாகனத்துடன் இணைக்கப்பட்டுள்ள தலைக்கவசத்தினை அணிந்தால் மட்டுமே வாகனத்தினை இயக்க இயலும். தலைக்கவசம் பயன்படுத்தினாலும் மது அருந்தியிருப்பின் வாகனத்தை இயக்க இயலாது என்ற வசதியும் இதில் உள்ளது. எனவே இக்கருவியின் மூலம் தலைக்கவசம் அணியாமலும், மது அருந்தியும் இருசக்கர வாகனங்கள் ஓட்டுவதால் ஏற்படும் விபத்துக்களை தடுக்க இயலும். மேலும் வாகனத்தை இயக்கும்போது ஓட்டுநர் தூங்க ஆரம்பித்தால் அல்லது குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் கண்களை மூடினால் வாகனம் தானாகவே எச்சரிக்கை ஒலி எழுப்பும்.

இந்த தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களின் கண்டுபிடிப்புகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் சார்பில் சென்னை தீவுத்திடலில் நடைபெறும் 44 வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் கண்காட்சியில் இடம்பெற்றள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**